188

OFFICE OF THE REGIST...
14 APR 1914

உ

ஸ்ரீதேவி சகாயம்.

உளக்குடி யென்னுந் திவ்ய நகரின்கண்

வீற்றிருந் தருளும்

மகாவரப்பிரசாதகியான

# ஸ்ரீ
# அங்காளபரமேஸ்வரி அம்மன்
# ஆனந்தக்களிப்பு

இஃது

சிவகெங்கை

ஜவுளி வியாபாரம்,

வெள்ளைச்சாமி சேருவைகாரர் குமாரர்

பெரியசாமி சேருவையா

லியற்றப்பெற்று

சிவகெங்கை.

தெ. இராமசாமி பிள்ளையால்

ஸ்ரீ கலா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

1914.

1825:38 · 2445Vk
N14
12515

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
11 APR 1914
MADRAS

உ

சிவமயம்.

# சாற்றுக்கவிகள்.

திருக்கைலாய பரம்பரை
திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ
சுப்பிரமணியதேசிகரவர்கள் மாணாக்கரும்
சிவகெங்கை சமஸ்தான இராஜகுருவுமாகிய
பிரான்மலை
ஸ்ரீ தெய்வசிகாமணி ஐயரவர்களால்
இயற்றியது.

## எண் சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்வளருஞ் சிவகெங்கைப் பதிவளருஞ் செல்வன்
செகத்திடைக்கற் றோர்க்கினிப்பான் செய்யகுண சீலன்
பார்வளரு மன்பருளக் குடிவாழும் பரமி
பத்தர்களுக் கருடருநம் பரமனிட வாமி
பேர்வளரும் பெரியபிர மானக்தக் களிப்பைப்
பேசியிட்டான் பெரிதுலகம் பேணுரநன் குணர்க்கே
தார்வளரும் நமதுவெள்ளைச் சாமிதரு தனையன்
சற்குணன்வாழ் தருபெரிய சாமிதன பதியே.

———(:)———

இஃது
திருசிரபுரம் வித்துவான்
மகா-ள-ள-ஸ்ரீ தி. க. பெரியண்ணம் பிள்ளை
யவர்கள் மாணாக்கரும்
கும்பகோணம் நெல் வர்த்தகம்
மகா-ள-ள-ஸ்ரீ சுப்பபிள்ளையவர்கள் குமாரருமாகிய

175115



வெள்ளைவாரணம் பிள்ளையவர்களால்
இயற்றியது.

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

சங்காளங் களத்தளிடை தனங்களுமங் தரத்தள்சல சமுகத் தாடான்
இங்காளன் புறமடியா ருளக்குடிவா ழுளக்குடியா ளிமவான் றந்த
அங்காள தேவியடிக் கானந்தக் களிப்பாவொண் ணலங்கல் வேய்ந்தான்
நங்காள கண்டரருள் பெறும்பெரிய சாமியெனும் நாவ லோனே.

———(:)———

இஃது
சிவகெங்கை சமஸ்தானம் வித்துவான் பிரமணூர்
மிராசுக்கணக்கு வில்லியப்ப பிள்ளையவர்கள் குமாரர்
காசிவிஸ்வநாத பிள்ளையவர்களால்
இயற்றியது.

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

தேமணக்கு மலர்ப்பொழில்சூ ழுளக்குடிவா ழங்காள
தேவி பொற்றாட்
பாமணக்க வுனைபெரிய சாமிவள்ளல் சிந்தனைப்
படிக்குந் தோறும்
நாமணக்கு மனமணக்கு முடன்மணக்கும் புலன்மணக்கும்
நவிலக் கேட்போர்
தாமணக்கக் கண்டவுடன் றற்போத நீங்கியுயர்
தவமுற் றாரே.

———(:)———

இஃது
சிவகெங்கை ஜவுளி வர்த்தகம் மகா-ா-ா-ஸ்ரீ
அ. ரு. சுந்தரம் பிள்ளையவர்கள் குமாரர்
வெள்ளிமலைப்பிள்ளையவர்களால்
இயற்றியது.

## எண் சீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
14 APR 1914
MADRAS.

ஓதரிய ரகரமொரு மூன்றிற்பாதி
யொளிர்தருவுஞ் சுளைப்பலவு முயர்ந்தவாசங்
காதமுறு தேமாவுங் கதித்துவானின்
கவினகடோ டுறழுமலர்க் காவுசூழத்
தாதுறையு முளக்குடிமா புரத்திற்சார்ந்த
தயாபரையங் கர்ளமைமேற் றமிழாற்றக்க
வாதரவாய்க் காவடிச்சிந் துரைத்துச்சேர்த்தி
யடைந்தனன்றென் குளந்தைநக ரதனில்வாழ்வோன்.

## அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

வரையடுத்த மணித்தோளான் மணமடுத்த நறுந்தொடையான்
வழுவே சாரா
நிரையடுத்த பெருந்தகையா னிதியடுத்த வணிமணியா
னிறைந்த சோதிப்
பரையடுத்த திருப்பாடற் பழக்கியநற் செழுமனத்தான்
பண்பின் மிக்கான்
திரையடுத்த திருமுரசான் றிகழ்பெரிய சாமியெனுஞ்
செல்வன் மன்னே.

———(:)———

இஃது
சிவகெங்கை மகா-ள-ள-ஸ்ரீ ப. ழ. முத்துச்சாமி
நாயுடோரவர்கள் குமாரர்
அரிகிருஷ்ண நாயுடவர்களால்
இயற்றியது.

## நேரிசைவெண்பா.

ஓது முளக்குடிமீ தோங்குமங்கா ளம்மன்மிசைச்
சாது வெனும்பெரிய சாமியன்பன்—போதவா
னந்தக்க ளிப்பைவிரி நானிலமார் சேடனுமா
னந்தக்க ளிப்புறச்சொன் னான்.

இஃது

மேலூர்த்தாலூகா குன்னகரம் பட்டி

மகா-ள-ள-ஸ்ரீ மு. ரா. ம. துரைச்சாமிப்பிள்ளை

யவர்களால

இயற்றியது.

## அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

செந்தமிழோர் போற்றுமுளக் குடிவாழ மங்காள
தேவி மீதிற்
சந்தமிகு மானந்தக் களிப்பதனை நம்பெரிய
சாமி சாற்ற
அந்தணனும் மறையவனுந் திசைத்தலையுற் றானவனு
வதில்வாழ் வாணி
யிந்தவுல கினிதுணைக்க நாவில்லே னென்றனள்யா
மியம்பற் பாற்றே.

———(:)———

I have perused with an ever increasing pleasure the able work designated "Aunanthakkalippu" the author of which is no other than Mr. V. Periasamy Servai avl, a thriving merchant, at Sivaganga.

It is very admirably composed in honour of his family-goddess Angala Eswari of Ulakkudy who deserves, undoubtedly all his worthy encomiums. The choice of expressions, words, and figures is simply excellent. To speak at length on its intrinsic worth will be as ridiculous an excess as "to add another hue unto the rainbow".

(Signed) A. Muhammed Ibrahim,
Senior Intermediate class,
The American College.

Madura,
15th Decr 1913.



ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி

அம்மன்

# ஆனந்தக்களிப்பு.

விநாயகர் காப்பு

## நேரிசைவெண்பா.

அங்காள கண்டரிடத் தார்ந்த வுளக்குடிவாழ்
அங்காள தேவிசர ணம்புயத்தைக்—கிங்கானந்
தக்களிப்பா வைப்பகர்வ தற்கருளு மிக்கவர
தக்களிற்றுப் பொற்கமலத் தாள்.

திருவளருளக் குடியின் மேவி வாழுந்
திரிபுரைசவுந்தரிமெய் யங்காள தேவி
அருள்வளரு மானந்தக் களிப்பாப் பாட
அதிகநல வரதகண பதிவர மளிப்பான் (1)

வடகுவடு தனுவென வளைத்தான் வரையின்
மடவநடை பயிலுமொரு பிடியன வளைத்தான்
இடமருவு முயர்பரம னடியே யுளம
தெணியொளிர வணிகுவன லணிதிகழ முடியே (2)

| | | | |
|---|---|---|---|
| சிகரமொளிர் தருநிமைய | வரையாள் | தனது | |
| திருவடியின் மலர்தொழுது பரவுகிற | வரையாள் | | |
| பகரரிய வுமைபினிரு | பதமே | யன்பிற் | |
| பணிதல்புரி குவனருளை யினிதுபெற | நிதமே | | (3) |
| நெடுவரைபொ டிபடவிடு | மயிலான் | இந்த | |
| நிலவுலகை யோர்நொடியில் வலம்வருநன் | மயிலான் | | |
| வடகயிலை பரனுதவு | குகனே | எனது | |
| மனமலரி லனவரத மனுவனறு | முகனே | | (4) |
| தவளசத தளமருவு | கலையாள் | உன்னும் | |
| தமியன்மன மலரிலரை நிமிடமுமே | கலையாள் | | |
| தவமுனிவர் சுரர்தொழுபா | ரதியே | நாளும் | |
| தருவள்பல கலைகளுணர் தருமதிக | மதியே | | (5) |
| கருவியென வுருபெரிய | மேகம் | குலவு | |
| கடல்பருகி யுதவுமழை யுடையபிர | வாகம் | | |
| மருமலர்நி றைந்ததட | மெங்கும் | சென்று | |
| மதுரவமு தெனவேநில மதனினனி | தங்கும் | | (6) |
| தடநெடிய பணைகடொறும் | வெள்ள | நீர | |
| தனைநிறுவி யுழுமுழவ ரனைவர்களு | முள்ளத் | | |
| திடைமகிழ்வு கொடுநென்முளை | தன்னை | விதைய | |
| திடுகிறந லடைவையுனை யிடநினைவ | தென்னை | | (7) |
| பருகுமது வினிதுகொடு | வந்த | பழனப் | |
| பனிமொழியர் கணவர்கையி லதனிலர | விந்த | | |
| விரைமலரை யுதவினள்ளி | யப்பா | வள்ள | |
| மெனவுரைசெய் துறவவர்க ணனிதரந | கைப்பார் | | (8) |
| பழனமதி லுழுமுழவர் | காவி | யென்னும் | |
| பனிமலரை யினிதுகொடு பனியரையே | கூவி | | |
| விழியிதென வவர்கைமலர் | பெய்வார் | உண்ட | |
| விரைமதுவ திகமோவென யுரையனவர் | செய்வார் | | (9) |

குருதுவய றனினடவு கட்டல் செய்யும்
குடைசியர்க ளிடைதுவள வடிபரவு வட்டப்
பரிமளக ளபமுல்லை யுறையும் சக்ரப்
பறவையென வருகயல்க ளுறுபுனலுண் மறையும் (10)

களைகளையு ழத்தியர்க ணீல நோக்கங்
களையிகலு முருகளைகு வளைகளையே சால
விளைபுலம தனின்மிக வெடுத்தே யெட்டி
விரைவுதர வெறிவருயர் கரையினை யடுத்தே (11)

முருகுகமழ் நறுமலரி னறவும் மிக்க
முதிருமதி மதுரதிரி விதகனியி னறவும்
குருகுவதி தருபழன மோடிப் பாயும்.
குலவுகதிர் மலிதருசெ நெலுவளர நீடி (12)

கதிர்பெருகு செந்நெலைய றுப்பார் நீண்ட
கனகவரை யெனவுறுபோ ரினைநனிகி றைப்பார்
அதிர்தரவெ ருதுகொடு வைப்பார் யெடுத்தே
பசமகிழ்வு மிகவிளைத னகமதனில் வைப்பார் (13)

கமலமலர் வாவியினீ ராட்டம் செய்யும்
கரியகுழல் வரிவிழிகொ ளரிவையர்க ளீட்டம்
அமரவர நிகரனவர் நாட்டம் என்ன
அலர்குவளை மலர்கடொறு முலவளிகள் கூட்டம் (14)

மருவுதிரு வனமெலிதழ் துன்னும் கமல
மலரினிள வனமிகவு நலமுறவே மன்னும்
திருவளரு நெடியதட மேவும் நல்ல
திடமுடைய கயல்கமுகு மடலொடிய வாவும் (15)

பொறிவரிக ணிறைசிறைய வண்டு மிக்கன்
பொடுபெடையி னுடன்வடிக டனைமகிழ வுண்டு
வெறிநறவி னினியவிசை பாடும் கொடிய
விடவரவை யடுபசிய மடமயில்க ளாடும் (16)

அரிகளதி விரைவுடனே யோடி வாழை
யரியகனி யினையுணுமே பிரியமொடு கூடி

கரியநிற முடைபமட மந்தி பலவின்
கனியதனை நனிநுகரு மினிதுறவே குந்தி (17)

மருவுமொரு விருகடிகை யெல்லை நல்ல
மணமுலவு மிணார்களுயர் குணமவிரு முல்லை
வரியுடைய சிறையளிக ளூதி யினிய
மதுரநறு மதுநுகரு மிதழதுறு சாதி (18)

பலவிடமு மணமிகவே புல்லி மிகவின்
பதுதருநன் மதுவுறுமெல் லிதழ்மருவு மல்லி
சலசமல ரதுதவிர ராஜா வென்னும்
தடநெடிய செடிமலரும் வடிவுமிகு ரோஜா (19)

விரிசிறைய ளிகணறவு மாந்தி நல்ல
விளரியிசை பயிலுமெழி லொளிரிரவி காந்தி
அருணநிற மருவுசெவ ரத்தை செய்ய
அலரிகுர வலர்தவள வலரிகள்சி ரத்தை (20)

தருவனம தனிலேவரு வாரை மருவ
தனையுதவி நிறுவுமித ழினையுறுமந் தாரை
அரியபசு நிறமொளிரு மாழை யன்ன
வடர்நெடிய விலையுடைய மடல்பெருகு தாழை (21)

கொடியனவர் நகைகொளவே பொங்கி நீண்ட
கொடியிலண ரடர்பசிய கடிகமழ்சம் பங்கி
படியதனி லனைவர்களும் மெச்சி யோதும்
படிநன்மண நெடிதுவளர் செடிமருவு பிச்சி (22)

உருவினுயர் மதனுடைய வாகு மிக்க
வுறுபகழி யெனமொழியு நறுமலர சோகு
தெரிவையர்கண் வருமுலைகண் மீது பசலை
செறிதரவே மதனன்விடுசரமெனுமொண் போது (23)

இனையநறு மலர்கள்செறி சோலை நீழ
லினையுடைய நெடியதரு நனிமருவு சாலை
மனுமிநகர் நலமிகவே பெரிதாம் ஈதின்
வளமதனை யளவிடவே யுளமதனி லரிதாம் (24)

175115

மதிதவழு மேனிலையி னல்லார் நல்ல
மணமருவு மிணர்கொண் மலரிணையணியு மல்லார்
மதுவுறுகு ழற்குதவு மிகவும் வாசம்
வளர்புகையை முகிலெனவேகளிமயில்க ளகவும் (25)

கதிர்கொண் மணி மாடமிசை மருவும் முழுவெண்
கலைமதிவி ணரமகளிற் நலமினிது பொருவும்
அதிமதுர மொழியர்குழ னீடும் சடையை
பரவமென வெணியதிக விரைவுதர வோடும் (26)

நனியுயர்று வசமாடம் வதியும் தரள
நகைகுமுத விதழியர்கண் முகமொளிரும் மதியம்
எனவமுத முனவருச கோரம் நெற்றி
யிணைவிலென வெணியகலு நினைவரிய தூரம் (27)

பனிமொழிமெ லியர்மிடறு சங்கம் மெய்யும்
பணைமுலையும் வணகிலவு மிணையுறுமா தங்கம்
மிஞும்வனம ருங்குலவிர் சிங்கம் எழிலை
வினவிலர மகளிரிவர் முனமுறுவர் பங்கம் (28)

இணையடிக டனிலேயிடு தண்டை யிடைய
திருமொழிக நடையையென மொழியுமத னண்டை
துணைகொள்குழை யிடம்வலிய சண்டை யிடவே
துரிதமொடு செலுமகளிர் வரிவிழிகொள் கெண்டை (29)

மலர்மகளை யனையவெழின் மடவார் சற்பால்
மனதினிலே யனவரதம் மறுமொணிறை கடவார்
குலவுமென மிடுமெனவே வருவார் கட்குக்
குறைவறந லறுசுவையொ டுறுமமுது தருவார் (30)

அறிவினுய ரிளைஞர்மிகு கற்பால் ஒங்கி
அனவரத மறநெறியின் மனமுறவே நிற்பார்
மறுமனைவி யரையுளம தெண்ணார் மிகவும்
வளர்கருணை பெருகுமெழி லொளிருமிரு கண்ணார் (31)

உருவினெழி லுறுமதனை நிகர்வார் நல்ல
வுயர்வுதரு கிறமெயுறு நயமொழியே பகர்வார்

பொருளின் வடதிசையனைபே பொருவார் நாளும்
புதுமலர்கொ டருவெனாந லிதமுறவே தருவார் (32)

அரனடியை யனுதினநி னைப்பார் அன்பின்
அனவளது சரிதையினை வினவியேவி யப்பார்
தருமவழி தனினிதிகொ டுப்பார் வளருந்
தனமுடைய மகளிர்மய றனைமெலவி டுப்பார் (33)

பனவருமி நலமிகவே தங்கி யெழில்கொள்
பாவுறுமு ளக்குடியி னுறைதரும தங்கி
அனவரத மடிமலர்வ ணங்கி யும்பர்
அரிபிரம ரறிவரிய திரிபுரைய ணங்கி (34)

அகரமென வுயிர்கடொறு மேவி ஞான
அருள்பெருகு பரமனிட மருவிவளர் தேவி
சகமுழுது மினிதுதவு மன்னை நெடிய
சகரவரி வரவருவண் புகழ்மருவு பின்னை (35)

கடமலைபொன் வடமலைமென் முலையாள் துய்ய
கடவுளர்க ணிலையையள விடுமிமைய மலையாள்
தடவிகட கரியுரிகொள் கலையாள் எழில்செய்
தருநனுத லெனுநெடிய வமர்பொருது சிலையாள் (36)

அலகில்பல புவனபரி பாலி செய்ய
அலர்கமல கரமதனி லிலகொளிர்க பாலி
புலவுகமழ் நெடியதிரி சூலி அண்ட
புவனசுர மசரமிக வலிருதர சூலி (37)

மருவலரை வென்றொளிரும் வாளி தூய
வரமுனிவர் சுரர்தொழுது பரவுமிரு தாளி
வரையெனவே திகழ்பசிய தோளி நெடிய
வடகயிலை யரனெதிரி னடனமிடு காளி (38)

தரளவட மொளிர்செய்தன வாரி தன்ன
தடியவரை யருளுமொரு நெடியகுண வாரி
மருமலர்கள் திகழ்நறிய தாரி விண்ணு
மகிதலமு மினிதுறவே புகழுமவ தாரி (39)

அமரர்தொழு கிரிவருகு மாரி மிக்க
வடலசுர ருடல்தடிசெய் திடமுடைய சூரி
தமருகம ருவியகர வீரி செய்ய
தரணியெயி ஃதிரவறை தருபரம ஞரி (40)

வனசமுகை யனையதன வாராள் தனது
மலரடிகள் பரவவறி விலர்களிடம் வாராள்
கனவளக மிசையணிபூந் தாராள் என்றுங்
கரியவிரு வினைகளினால் வருபிறவி தாராள் (41)

திரிபுரத கனனுடைய வாமி செய்ய
திலகநுதன் மதிவதன மிலகுசிவ காமி
அரியதனி லிவருமயி ராமி நல்ல
அனமெனடை மினலினிடை மனுகுறமின் மாமி (42)

பரமனிடம் மருவிவளர் சத்தி தனது
பதமலரை நினைபவர்க ளிதயவன சத்தி
கரமலர தனிலுறுபா சத்தி விழாவைக்
கருதிநில வுலகுபணி தருகுடமா சத்தி (43)

நவில்தருமி வங்காள வன்னை வளரும்
நலநிலவு தளியினது குலவுமெழில் தன்னை
எவிதமென வுளாதரவே கூடும் அஃதின்
எழின்மதில்வி ணவருலகின் வழியெனவே நீடும் (44)

தகதகென வொளிருமெழி லுடைய கோயில்
தனிலுறுகோ புரநிவரு மணிகிளர்வி னுடைய
நகுகதிர்பொ னினில்வேய்ந்து நீடு கதவின்
நனியெழிலை வினவிலுல கினிலிலையே யீடு (45)

மணிமகர தோரண மிலங்கும் வாயில்
மணியொளிரி வாலயம தனினனி துலங்கும்
அணிதிகழ்நம் மங்காளி சேயன் என்று
அனவளது கனமுறுச னிதிமருவு தூயன் (46)

அதிகவெழி லொளிருமுக மதியான் புகல
வருமடிய ரலதுபிரி தொருவரையு மதியான்

மதுகையிட வரையடுது வரையான் றனது
மருகனென வுயருமடன் மருவுபுய வரையான் (47)

அயிலவிரு மயிலுடைய கையான் றன்னை
அனவரத வினைபவரை மனதினிலே கையான்
கயிலையுறை தருகரக பாலன் எனனும்
கருதரிய பரமனினி தருளவரு பாலன் (48)

கடலுலகு புகழுமெழின் மெய்யன் இந்தக்
கலியுகம தனிலினிய நலமுதவு மெய்யன்
மடன்மருவு துளவனொடு கமலன் உம்பர்
வரமுனிவர் நரருரகர் பரவுபத கமலன் (49)

அரையதனி லணிதருபொன் னுடையான் என்றும்
அடியடிசெய் வாழையென வடிமைகளை யுடையான்
அருள்வளரு மிருளப்ப னென்னும் சுவாமி
அளவில்பல புகழ்மருவு வளமிகவே துன்னும் (50)

பதுமநறு மலர்கொடிரு மங்கை மிகவும்
பலனுதவ வனவரத மிலகுசிவ கங்கை
அதனிலுறை தருவெள்ளைச் சாமி சேர்வை
யருளுதவ மதலையென வருபெரிய சாமி (51)

சொலுமி னைகருயர் விசுவ நாத சுவாமி
சுவர்ணமதி லொளிதளியி னவிர்தரவே போத
நலனுறுந மிறையருளைக் கிட்டிப் பாலால்
நனுமயில் கொள்காவடியை யணிதரவே கட்டி (52)

முகிலெனவே பலவிய முழங்கி யதிர
முறையொடா ராதனைகள் குறைவற வழங்கி
அகமதனி லிருளனையே வாழ்த்தி யினிய
அருளுற வணங்கினர்க டிருவடியை யேத்தி (53)

கொடிமகர தோரண மிலங்கச் சந்த்ரக்
குடைகளொடு மிடுகவரி யெடுபிடி துலங்க
தடவிகட கடகரிகள் முந்த மிகவும்
தடதடென நடையுடைய கடவுபரி யுந்த (54)

அடியவர்கள் சிந்துகவி பாட யன்பாய்
அரகரவெ னவேசொலியே வரவனைகர் கூட
நெடுமிநகர் வலம்வரவ டுத்தே தோளில்
நியமமிகு காவடியு ணயமுறவெ டுத்தே (55)

கவுரிதிரி புரதகனி தந்த கடவெங்
கயவதன முடையநிரி நயனவொரு தந்த
கவுரிகஜ முகனடி வணங்கி மிக்கக்
கவினுறந டந்தனர்க ளவிரிழை பணங்கி (56)

தினகரனை யனுகிநனி நீடிக் கதிர்செய்
திடசிகர வரண்மனைபி னெடியதெரு நாடி
மனுநகருள் பெருகவலம் வந்தே நல்ல
மணமருவு பலவளவா வணமதின டந்தே (57)

பலகலைக ளழகுறநி றைத்து நலமிற்
பனவலவர் கனமுறவே நனிபருண்மி குத்து
விலையுரைசெய் சவுளிமரு கதனி னணினர்
மிளிர்கணைக ளெனவேயெழி லொளிர்விழிகொள் வதனி (58)

பலபலச ரக்குமிக நிறையும் கடையில்
பகர்தலொடு குறையறவே பகருமொரு முறையும்
நலமுறவி ளங்குகடை வீதி தன்னில்
நயமொடுந டந்தனர்கள் புயலனைய வோதி (59)

கருதுமிரு கடிகைவெலை யெட்டி மின்னும்
கனகமுயர் நவமணிக ணனியுறவே கொட்டி
திரமையொடு விலைகள்பகர் செட்டித் தெருவைத்
திடமுடன டந்தனர்கள் நெடுமறுகு கட்டி (60)

கலைமதியை நிகர்தருவ தனியே பொன்போற்
கமலமதி லனமொளிரும் வளமினிது மனியே
நிலவுபுகழ் மாப்பிள்ளைத் தேவ ரூரு
ணியையணுகி வந்தனர்கள் நயமிகவே மேவ (61)

மருவுகலை மகளினிய குடியார் ஓது
வடுவில்புகழ் வாணியங் குடியினிலே யடியார்

அரகரவெ னும்மோதை தானே ஒங்க
அரைநொடியில் வந்தனர்கள் கரியகுழன் மானே (62)

பிரிவரிய பெடையொடு குளத்தில் அன்னம்
பெரிதுறையு மழகுதிகழ் தருமிகு வளத்தில்
பொருவரிய வேட்டைக் குளத்தில் மிக்க
புகழுற வந்தனர்கள் மகிழ்தர வுளத்தில் (63)

கம்லமிசை யுறுவளையின் முத்தம் கண்டு
கலைமதிய மெனவலிமென் மலர்மலரும் நித்தம்
கமலநிறை தடமுறுநென் மேனி தன்னிற்
கனமுடனே வந்தனர்கள் வனிதையர்கி தானி (64)

விழுப்புளிகொண் மயில்கணட மாடும் தண்கா
வினிலேவரி யளிகளிசை யினிதுறவே பாடும்
கழுப்புளியை யணுகினர்கள் தானே வெய்ய
கடுவினையும் வடுவினையு மடுவிழிகொண் மானே (65)

மருநிறைகு வளைமலரை மேதி யுண்ணும்
மருதநில வரியளிக ளூறுமலரை யூதி
விரைமதுவை யினிதுணுமா வடியேந் தலிலே
விரைவுடனே யந்தனர்கள் பிரியமொடு நொடியே (66)

தடநெடிய வயலின்வெடி வாளை தென்னந்
தருவிலடர் தருபசிய கிறமருவு பாளை
யுடையகனி யுதிரவுக ளூங்கா வளம
துறுபெரிய கோட்டையினின் மருவினர்கள் நங்காய் (67)

அறைதருமி வளநகரின் மன்னும் நல்ல
அருள்பெருகு வரமுதவு குருநாத னென்னும்
இறைவனிரு மலரடி வணங்கி யப்பால்
இனிதுறந டந்தனர்கள் கனிமொழி யணங்கி (68)

நலகுவளை யினைமுனமே யுண்ட மாலின்
நளினகர மதனிலுயர் வளையனைய கண்ட
இலகுவளை யுடையகர மானே யுற்றே
மினிமையுறு தெக்கூர தனைநணியே தானே (69)

உமைதருமிந் நகரினுயர் துய்யன் நல்லன்
புறுமடிய ரகவிருள தறவருளு மெய்யன்
வரைவிலுறு கயிலாச நாதன் பாத
மலர்தொழுது வருமழகு சொலவலனே வேதன் (70)

வனசமலர் மருவுமிள வன்னம் தாழை
மலர்மடலை மதலையென நலநிலவு தன்னம்
மனுமடியி னிறுவிவிளை யாடி மிக்க
மனமகிழி டைக்காட ரூர்நணினர் நாடி (71)

வைகையென வொருபரம னேதப் பூதம்
மனமகிழ்வு கொடுகரம தனைவைமிசு சீத
வைகைதனி லினியபுன லாடி யன்பு
மருவிடந டந்தனர்க ளிருளனையே பாடி (72)

மதிவதன மலைமுலைகண் மானே என்ன
வனமருவு கரியகுழன் மனுமினிய தேனே
அதிகபுக ழினிதுவளர் கட்டிக் குளம
தனினணுகி வந்தனர்க ளினியவருள் கிட்டி (73)

பகர்தருமி வளநகரி லுறையும் மிகவன்
பதுதிகழு மனைவர்களு மதிபுகழு நிறையும்
சுகமுமுற வருள்ராம லிங்க நாதர்
துணையடிகள் தொழுதனர்க ளணுகியருள் தங்க (74)

மருவுகுக னெளிர்கரம தன்னி லோங்கு
வடியுறுவ லடலவிரு சுடரயிலை மன்னிப்
பொருவரிகொ டடகெடிய கண்ணி யெங்கும்
புகழ்கட்ட னூரதனை யகமகிழ நண்ணி (75)

தவளவளை கருநிறைவு கொண்டு மிகவே
தருமணியி லிலவிவரு கிரணமது கண்டு
குவளைமுகை யவிழ்கமல வாவி யத்தி
குளமதனை மருவினர்க ளுளமகிழ்வு மேவி (76)

மிருதுவுறு தளிரனைய மெய்யார் நீண்ட
விழியெனவே கயல்களுக ளெழிலதுறு செய்யார்

கிருதுமா நதியதனில் வந்தே யன்பு
கிளர்தரவே மருவினர்க ளுளமகிழு வந்தே (77)

சுகமினிய பெடையுடனே யின்கா தனிலே
சுகமுறம றைகணவிழு மகிழ்தரவே நன்கா
சுகமிகவு ளக்குடியு வந்தே நல்லா
சுகவிழியே வந்தனர்க ளகமதும கிழ்ந்தே (78)

மிகுசெழிய நெடியவிலை வாழை யொமோ
விலைகள்செறி தோரணம திலகுமுயர் தாழை
திகழ்பசிய காயடருங் கொதது பலவு
செழியகமு கொடுகிமிரு மழகுபெற வொத்து (79)

மலிதரவ ரிசையதுசி றந்த வாச
மலரினிடு தடநெடிய நிலவுலவு பந்தர்
இலகுமுயர் கோவில்வலம நணியே வந்தே
யினிதுறவ மர்ந்தனர்கள் கனதனகண் மணியே (80)

மருவுபல திசைகடனி லண்டு தொண்டர்
மனமதனி லதிமகிழ்வு மனவினிது கொண்டு
வருமெழில்கொள் காவடிகள் வகையை யாரும்
வலிமைகொடு சொலவரிது நிலைமையொடு தொகையை (81)

நிறைதருபா லுறுகலசம் நண்ணி யன்பு
நிலவிவரு காவடிகள் சொலவரிதே யெண்ணி
மறுகினிடை வெளியறவே சக்க ரைக்கா
வடிகடனை யெவர்வலவர் திடமொடும திக்க (82)

படவரவல் குலுமொளிரும் வார்க்கா மென்னும்
பணைமுலையும் மனுமயிலே நனுசெவிள நீர்க்கா
வடிகள்பல கோடியெழில் மச்சம் கட்டி
வருகிறகா வடிகடொகை பெருகுமொரு லச்சம் (83)

இனையபல காவடிகள் முந்தத் தோளில்
இனிதுகொடு மகிமையது நனியுறவே வந்த
அனைவர்களு மனமிகவு வந்து கோயில்
அதனினணி மருவினர்கள் மனமதும கிழ்ந்து (84)

அருள்பெருக வருமொருகா வடியின் பாலால்
அரனுதவு புகழ்மருவு மிருளனது முடியின்
வரன்முறையி னபிடேக மினிதாய்ச் செய்து
மனமதனி லனவனரு ணணினர்கள்மின் வனிதாய் (85)

அரியவசுவாமி குரு நாதன் சோனை
யனுதினமு மனையிலுயர் முனியனெனு நீதன்
வருவீர பத்திரனா லாண்டி நொண்டி
மனுவீர னெடுகருப் பணனையுமே வேண்டி (86)

இருளியங் காளவரு ளாட்சி ராக்கி
யிடர்கள்புரி பவருடைய குடர்கள்பறி பேச்சி
உரைதருமி விறையவர்கண் மகிழ வேதான்
உனவரிய பூசனைசெய் தனருலகு புகழ (87)

இனையபல பூசனை புரிந்தார் உம்பர்
இலகுமது வொழுகுபுது மலர்மழை சொரிந்தார்
தனைநிகரி லங்காள வனையின் அருளா
தனையினித டைந்துமரு வினர்தமது மனையின் (88)

இருநிலமு வகையுறவி நாலே மாலுக்
கிடுகவரி யெனவிரிக முகமடலின் சோலே
மருவுசிவ கங்கையுயர் பதியான் அமுத
மகிவதனன் மதியினுயர் மதிகொடன பதியான் (89)

திலகனுத லியர்மயல்கொண் மாரன் அனைய
தெவங்கபெரு மாளினி துவந்தருள்கு மாரன்
சிலைகொளு மிராமனென வந்தான் மன்னச்
சினிலுதவி யினிமையுற மனமிகவு வந்தான் (90)

அருள்வளரு மங்காளி வாழி யோதும்
அனவளது சுதனெனவே மனுமிருளன் வாழி
பரிவார தேவர்களும் வாழி முக்கட்
பரமனுமை யவளுடனே திருநீறும் வாழி (91)

உயர்வுமிகு மறையவரும் வாழி செங்கோ
லுடனிலகு மணிமகுட முடிமனரும் வாழி

புயலுங்கடு வானகமும் வாழி இந்தப்
புவியினரு நலமுதவி நூலுமிக வாழி (92)

### நேரிசைவெண்பா

பார்வாழி தேவி பதம்வாழி வேதமொடு
கார்வாழி சித்தர் கணம்வாழி—சீர்வாழி
பன்னூ லுணர்ந்ததமிழ்ப் பாவலருங் காவலரும்
இன்னூலு மேவாழியே

ஆனந்தக்களிப்பு
முற்றுப்பெற்றது.

175115